# மதுவரிக் கட்டளைச் சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 926

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், 2008 ஏப்ரல் 10 ஆம் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் காணப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 902 இல் பிரசுரிக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகள் என்பன 2010.11.23 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு திருத்தப்படுவதாக இத்தால் இந்த அறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

1. மேற்குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் அட்டவணை 1 இல் காட்டப்பட்ட உரிமக் கட்டணங்கள் இந்த அறிவித்தலின் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தப்பட்டுள்ளது.

2. III ஆம் அட்டவணையின் 29 ஆம் பந்தி நீக்கப்படுவதுடன், அதற்குப் பதிலாக பின்வரும் வசனம் பதிலீடு செய்யப்படுகின்றது:-

"மாற்றிப் பெறுநர் மாற்றுநரின் சட்ட ரீதியான உரிமக்காரர் ஒருவராக இல்லாதபோது, எப்.எல்.04 வகையான உரிமங்களுக்கு மேலும் ரூபா 1,500,000/- செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் ஏனைய வகையான மாற்றல்களுக்கு உரிமக் கட்டணமாக அத்தகைய மாற்றிப் பெறுநர் ரூபா 200,000/- செலுத்தப்படுதல் வேண்டும்."

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி திட்டமிடல் அமைச்சர்.

நிதி திட்டமிடல் அமைச்சு,

கொழும்பு – 01,

2010 நவம்பர் 19 ஆந் திகதி.

## அட்டவணை 1

## வருடாந்த உரிமக் கட்டணம்/செலுத்தப்படவேண்டிய பிணைப் பணம்

| | நிரல் 1 | நிரல் 11 | |
|---|---|---|---|
| | உரிமத்தின் தன்மை அல்லது விவரணம் | வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா | பிணைப் பொறுப்பு ரூபா |
| 1. | மோல்ட் மதுபானம் தயாரிப்பதற்கான உரிமம் | 200,000/- | 50,000/- |
| 2. | நாட்டில் தயாரித்த வெளிநாட்டு மதுபானத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் | 200,000/- | 5,000/- |
| 3. | போத்தலிலடைக்கப்பட்ட பால் பன்ச்சை அத்துடன் / அல்லது வைன்களை உற்பத்தி செய்து விற்பதற்கான உத்தரவுப் பத்திரம் | 1,000/- | - |
| 4. | வடிகட்டல் தவிர்ந்த ஏனைய செயன் முறைகளால் உற்பத்தி செய்யப்பட்ட கன அளவில் 4% இற்கு மேற்படாத மதுசாரத்தைக் கொண்ட கிளையில்லா மரங்களிலிருந்து அல்லது ஏதேனும் வேறு தாவரங்களிலிருந்து பெறப்பட்ட மதுபானத்தின் தயாரிப்பும், போத்தலில் அடைப்பும் விற்பனவுக்குமான உரிமம் | 500/- | - |
| 5. | கிளையில்லா மரங்களிலிருந்து அல்லது ஏனைய தாவரங்களிலிருந்தான இயற்கை உற்பத்திகளிலிருந்து வடிகட்டல் தவிர்ந்த ஏனைய செயன்முறைகளால் உற்பத்தி செய்யப்பட்டதும், கன அளவில் 4% இற்கு மேற்பட்ட மதுசாரத்தைக் கொண்டதும், கள்ளு அல்லது தானியங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட வேறு மதுபானங்கள் தவிர்ந்த மதுபானங்களை உற்பத்தி செய்வதற்கான உரிமம் | 2,000/- | - |
| 6. | தேயிலையிலிருந்து மதுபானம் உற்பத்தி செய்வதற்கான உரிமம் | 500/- | - |
| 7. | யாழ் மாவட்டத்தில் மரம் சீவுவதற்கான உரிமம்<br>ஆண் பனை (ஒரு மரத்திற்கு)<br>பெண் பனை (ஒரு மரத்திற்கு)<br>தென்னை (ஒரு மரத்திற்கு)<br>கித்துல் மரம் சீவுவதற்கான உரிமம் (வருடத்திற்கு) | <br>25/-<br>35/-<br>35/-<br>50/- | <br>-<br>-<br>-<br>- |
| 8. | கள்ளுத் தவிர்ந்த ஏனைய உற்பத்திகளிலிருந்தும் தென்னையிலிருந்து வடிகட்டும் மதுசாரத்திலிருந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட “வெளிநாட்டு” மதுசாரங்களை உற்பத்தி செய்வதற்கான உரிமம் | 5,000/- | 5,000/- |
| 9. | வடிசாலைகளுக்கான உரிமம் | 100,000/- | 5,000/- |
| 10. | களஞ்சியசாலைக்கும் பண்டகசாலைக்குமான உரிமம் | 10,000/- | இல்லை |

| | நிரல் 1 | நிரல் 11 | |
|---|---|---|---|
| | உரிமத்தின் தன்மை அல்லது விவரணம் | வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா | பிணைப் பொறுப்பு ரூபா |
| 11. | சாராயம்/பியர் உற்பத்தியாளரின் தொகை வியாபார உரிமம் | 100,000/- | 50,000/- |
| 12. | கள்ளைப் போத்தலில் அடைப்பதற்கான உரிமம் | 200,000/- | - |
| 13. | வினாகிரி உற்பத்தியிடத்திற்கான உரிமம் | 500/- | - |
| 14. | வினாகிரியின் பொருட்டு கள்ளிறக்கல் (மரமொன்றுக்கு) | 25/- | - |
| 15. | மதுபான மொத்த விற்பனைக்கான உரிமம் (எவ்.எல்.3) | 500,000/- | 50,000/- (சாராயத்திற்கு மட்டும்) |
| 16. | மதுபான சில்லறை விற்பனைக்கான உரிமம் (எவ்.எல்.4)<br>1. மாநகரங்களில்<br>2. நகரங்களில்<br>3. ஏனைய இடங்களில்<br>4. வருடமொன்றுக்கு ரூபா 72 மில்லியனுக்குக் கூடுதலான வியாபாரம் நடைபெறும் அதியுயர்ந்த வர்த்தக நிலையங்கள் அவையொத்த விற்பனை ஸ்தாபனங்களுக்கு வழங்கப்படும் உரிமம் | <br>300,000/-<br>200,000/-<br>150,000/-<br>400,000/- | <br>25,000/-<br>25,000/-<br>25,000/-<br>25,000/- |
| 17. | விடுதிகளுக்கான உரிமம் (எவ்.எல்.7) (உல்லாசப் பயணச் சபையால் அனுமதிக்கப்பட்டது)<br>1. 250 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள்<br>2. 200 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள்<br>3. 100 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள்<br>4. 50 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள்<br>5. 20 அதற்கு மேற்பட்ட அறைகள்<br>6. 20 இற்குக் கீழ்பட்ட அறைகள்<br>7. உல்லாசப் பயணச் சபையின் அங்கீகாரத்தைப் பெறாத ஹோட்டல் 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் | <br>500,000/-<br>400,000/-<br>225,000/-<br>200,000/-<br>175,000/-<br>150,000/-<br>150,000/- | <br>5,000/-<br>5,000/-<br>5,000/-<br>5,000/-<br>5,000/-<br>5,000/-<br>25,000/- |
| 18. | ஹோட்டல் மதுச்சாலைக்கான உரிமம் (எவ்.எல்.8) மாநகர சபை இடப்பரப்பு<br>ஏனைய இடங்கள்<br>துணை உரிமம் | 50,000/-<br>40,000/-<br>25,000/- | -<br>-<br>- |

| | நிரல் 1 | நிரல் 11 | |
|---|---|---|---|
| | உரிமத்தின் தன்மை அல்லது விவரணம் | வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா | பிணைப் பொறுப்பு ரூபா |
| 19. | விசேட சந்தர்ப்பத்திற்கான உரிமம் (ஒரு நாளைக்கு) (எவ்.எல்.14) | 5,000/- | - |
| 20. | விற்பனை நேரங்கள் நீடிப்பதற்கான குறைநிரப்பு உரிமம் (எவ்.எல்.15) முதல் இரண்டு மணித்தியாலங்களுக்கு – (மணித்தியாலத்திற்கு)<br>அதற்கு மேலதிகமாக – (மணித்தியாலத்திற்கு)<br>(விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படமாட்டாது) | 500/-<br>5,000/- | -<br>- |
| 21. | ஏலத்தில் விடுபவர்களுக்கான உரிமம் (ஒரு நாளைக்கு) (எவ்.எல்.16) | 5,000/- | - |
| 22. | சினிமா கொட்டகைகளுக்கான களியாட்ட மதுபான விற்பனைக்கான உத்தரவுப் பத்திரம் (எவ்.எல்.9) | 100,000/- | 25,000/- |
| 23. | வாடி வீட்டிற்கான உரிமம் (எவ்.எல்.12) | 75,000/- | 25,000/- |
| 24. | உணவுச் சாலைகளுக்கான உரிமம் (எல்லாப் பயணச் சபையின் அங்கீகாரம் பெற்றவை) (எவ்.எல்.11)<br>உணவுச்சாலைத் தரம் “அ”<br>உணவுச்சாலைத் தரம் “ஆ”<br>உணவுச்சாலைத் தரம் “இ”<br>உல்லாசப் பயணச் சபையின் அங்கீகாரத்தைப் பெறாதவை (விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படும்) | <br>250,000/-<br>200,000/-<br>150,000/-<br>150,000/- | <br>5,000/-<br>5,000/-<br>5,000/-<br>25,000/- |
| 25. | புகையிரத உணவுச்சாலை (எவ்.எல்.10) | 25,000/- | 25,000/- |
| 26. | கலரிகளுக்கான உரிமம் (எவ்.எல்.13) | 400,000/- | 25,000/- |
| 27. | அங்கத்தவர் மட்டுமான கழகம், சமூக பொழுதுபோக்கு விளையாட்டுக் கழகங்கள் (எவ்.எல்.13அ)<br>மாநகர இடப்பரப்பு<br>நகர இடப்பரப்பு<br>ஏனைய இடப்பரப்பு | <br>150,000/-<br>100,000/-<br>50,000/- | <br>25,000/-<br>25,000/-<br>25,000/- |
| 28. | விளையாட்டுக் கழகங்கள்<br>மாநகர இடப்பரப்பு<br>நகரமும் ஏனைய இடங்களும் | <br>100,000/-<br>50,000/- | <br>-<br>- |

| | நிரல் 1 | நிரல் 11 | |
|---|---|---|---|
| | உரிமத்தின் தன்மை அல்லது விவரணம் | வருடாந்த உரிமக் கட்டணம் ரூபா | பிணைப் பொறுப்பு ரூபா |
| 29. | பியர், ஏல், ஸ்டவுட், வைன் விற்பதற்கான விசேட உரிமம் சில்லறையாக விற்பனை செய்தல் (எவ்.எல்.22 அ)<br>விற்பனை நிலையத்தில் நுகர்வதற்கு விற்பனை செய்தல் (எவ்.எல்.22 ஆ) | 50,000/-<br>75,000/- | 2,500/-<br>2,500/- |
| 30. | தோட்ட கன்ரீன் (கள்ளு மட்டும்)<br>தோட்ட கன்ரீன் (சாராயமும், கள்ளும்) | 20,000/-<br>50,000/- | 10,000/-<br>10,000/- |
| 31. | செறிவு கூடிய மதுசாரத்தை விற்பதற்கு (எவ்.எல்.17) | 2,500/- | - |
| 32. | மருந்தூட்டப்பட்ட வைன்கள் விற்பனைக்கான உரிமம் (எவ்.எல்.18) | 2,500/- | - |
| 33. | வைன் ஸ்பிரித்து விற்பனை | 500/- | - |
| 34. | ஈதைல் மதுசார விற்பனை | 25,000/- | 2,500/- |
| 35. | போத்தலில் அடைப்பதற்கான உரிமம் | 10,000/- | - |
| 36. | பதநீர் சீவுவதற்கான (குடிசைகள்) உரிமம் (தென்னை மரம்) | 25/- | - |
| 37. | வாணிபத்திற்குப் பதநீர் சீவுவதற்கான உரிமம் (தென்னை மரம்) | 50/- | - |
| 38. | கள்ளைச் சேகரிக்கும் நிலையத்திற்கான உரிமம் | 1,000/- | - |
| 39. | மருத்துவ நோக்கத்தின் பொருட்டு நுகர்வதற்காகக் கள்ளு சீவுவதற்கான விசேட உரிமம் | 50/- | - |
| 40. | நொதிச்ச/நொதிக்காத கள்ளைச் சீவுவதற்கு, உற்பத்தி செய்வதற்கு இருப்பதற்கான உரிமம் | 25/- | - |
| 41. | ஈதைல் மதுசாரத்தைப் பாவித்து மருந்துப் பொருள்/ ஆயர்வேத உற்பத்திகள் தயாரிப்பு தொடர்பாக வழங்கப்படும் உரிமம் | 10,000/- | - |
| 42. | ஈதைல் மதுசாரத்தைப் பயன்படுத்தி கைத்தொழிற் பொருட்கள் தயாரிப்பதற்காக வழங்கப்படும் உரிமம் | 500,000/- | - |
| 43. | குடிபானமற்ற ஸ்பிரித்துகள் இறக்குமதி மற்றும் வைத்திருப்பதற்கான உரிமம் | 25,000/- | - |

| | நிரல் 1 | நிரல் 11 |
|---|---|---|
| | **உரிமத்தின் தன்மை அல்லது விவரணம்** | **வருடாந்த உரிமக் கட்டணம்/பிணைப் பொறுப்பு** |
| 44. | பதனிடப்பட்ட சாராயத்தை உற்பத்தி செய்து மொத்த அடிப்படையில் விற்பனை செய்வது அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற்கான உரிமம் | ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 200,000/- என்ற அடிப்படையில் நடப்பு வருடத்தில் ஓகத்து 31 ஆந் திகதி முடிவுற்ற தொடர்ச்சியான பன்னிரண்டு மாத காலப்பகுதியிலும் நிலையத்தில் விற்கப்பட்ட, வழங்கப்பட்ட சாராயத்தின் அளவின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட உரிமக் காலப்பகுதியில் விற்கப்பட்ட, வழங்கப்பட்ட சாராயத்தின் அளவுக்கான மதிப்பீட்டில் லீற்றருக்கு 25 சதம் என்ற அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட தொகை. |
| 45. | மொலாசிஸ், கருப்பஞ் சாராயத்தை உற்பத்தி செய்து மொத்தமாக விற்பனை செய்வதற்கு அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற்கான உரிமம் | ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 200,000/- என்ற அடிப்படையில் நடப்பு வருடத்தில் ஓகத்து 31 ஆந் தேதி முடிவுற்ற தொடர்ச்சியான பன்னிரண்டு மாத காலப்பகுதியிலும் நிலையத்தில் விற்கப்பட்ட வழங்கப்பட்ட சாராயத்தின் அளவின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட உரிமக் காலப் பகுதியில் விற்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட சாராயத்தின் அளவுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட கணியத்தில் லீற்றருக்கு 25 சதம் என்ற அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட தொகை. |
| 46. | பனம் சாராயத்தை மொத்த ரீதியில் உற்பத்தி செய்து விற்பதற்கான அல்லது உற்பத்தி செய்து மொத்த ரீதியில் விற்பனை செய்யும் விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற்கான உரிமம் | ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 50,000/- என்ற அடிப்படையில் நடப்பு வருடத்தில் ஓகத்து 31 ஆந் தேதி முடிவுற்ற தொடர்ச்சியான பன்னிரண்டு மாத காலப்பகுதியிலும் நிலையத்தில் விற்கப்பட்ட, வழங்கப்பட்ட சாராயத்தின் அளவின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட உரிமக் காலப்பகுதியில் விற்கப்பட்ட /வழங்கப்பட்ட சாராயத்தின் அளவுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட கணியத்தில் ஒரு தொகை லீற்றருக்கு 25 சதம் என்ற அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட தொகை. |
| 47. | விசேட சாராயத்தை மொத்த அடிப்படையில் செய்து விற்பதற்கான அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை செய்யும் நிலையங்களுக்கு வழங்குவதற்கான உரிமம் | ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 500,000/- என்ற அடிப்படையில் நடப்பு வருடத்தில் ஓகத்து 31 ஆந் தேதி முடிவுற்ற தொடர்ச்சியான பன்னிரண்டு மாத காலப்பகுதியிலும் நிலையத்தில் விற்கப்பட்ட, வழங்கப்பட்ட சாராயத்தின் அளவின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட உரிமக் காலப்பகுதியில் விற்கப்பட்ட/ வழங்கப்பட்ட சாராயத்தின் அளவுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட கணியத்தில் ஒரு தொகை லீற்றருக்கு 25 சதம் என்ற அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட தொகை. |

| | நிரல் 1 | நிரல் 11 |
|---|---|---|
| | **உரிமத்தின் தன்மை அல்லது விவரணம்** | **வருடாந்த உரிமக் கட்டணம்/பிணைப் பொறுப்பு** |
| 48. | தென்னம் சாராயத்தை மொத்தமாக உற்பத்தி செய்து விற்பதற்கான அல்லது உற்பத்தி செய்து மொத்த விற்பனை செய்யும் நிலையங்களுக்கு வழங்குவதற்கான உரிமம் | ஆகக் குறைந்த கட்டணம் ரூபா 200,000/- என்ற அடிப்படையில் நடப்பு வருடத்தில் ஓகத்து 31 ஆந் தேதி முடிவுற்ற தொடர்ச்சியான பன்னிரண்டு மாத காலப்பகுதியிலும் நிலையத்தில் விற்கப்பட்ட, வழங்கப்பட்ட சாராயத்தின் அளவின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட உரிமக் காலப்பகுதியில் விற்கப்பட்ட, வழங்கப்பட்ட சாராயத்தின் அளவுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட கணியத்தில் ஒரு தொகை லீற்றருக்கு 25 சதம் என்ற அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட தொகை. |

குறிப்பு:

(அ) 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 41, 42, 44, 45, 46, 47 மற்றும் 48 ஆகிய இலக்கங்களின் கீழ் விபரிக்கப்பட்ட உரிம வகைகள் உற்பத்திக்கான உரிமங்களின் கீழ் கையாளப்படும்.

(ஆ) 15, 16, 17, 18, 22, 23, 24, 25, 26, 27, 28, 29 மற்றும் 30 ஆகிய இலக்கங்களுடைய விடயங்களின் கீழ் விபரிக்கப்பட்ட உரிம வகைகளுக்க மட்டும் விண்ணப்பக் கட்டணம் அறவிடப்படும்.

(இ) 1, 2, 3, 4, 5, 6, 8, 12, 44, 45,46, 47 மற்றும் 48 என இலக்கமிடப்பட்ட விடயங்களின் கீழ் விபரிக்கப்பட்ட உரிமங்களின் பொருட்டு போத்தலிடுவதற்கான உரிமம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(ஈ) 2006, ஏப்ரல் 03 ஆந் திகதியிடப்பட்ட 1439/1 ஆம் இலக்க அதிவிசேஷமான வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைவாக முத்திரை வரி அறவிடப்பட வேண்டும்.